## 11.6 1999–2000–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட சமன்பாடு மற்றும் ஊக்க நிதியை பகிர்ந்தளிப்பதற்கான வழி முறைகள்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 151 நாள் : 22.07.1999

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண் 50474 / 99/ ஊ.அ (ம) நி–1 , நாள் 16.06.1999

**ஆணை**

1999–2000ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 73.4633 கோடி ஒதுக்கப்பட்டுள்து.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் மீது ஆய்வு செய்யப்பட்டு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியான ரூ. 73.4633 கோடியினை கீழ்கண்டவாறு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடுகிறது.

(ரூ. கோடியில்)

| நிதி தலைப்புகள் | கிராம ஊராட்சி / ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள் |
|---|---|---|---|
| **சமன்பாட்டு நிதி** | | | |
| **1.1 குடிநீர்**<br>வருவாய் குறைவான நலிந்த ஊராட்சிகள் குடிநீர் கட்டண தொகையினை செலுத்த வழி வகை செய்ய மாவட்டத்திற்கு தலா. ரூ. 10 இலட்சம் வீதம் (ரூ. 10 இலட்சம் x 28) | 2.80 | --- | --- |
| **1.2 மின் கட்டணம்**<br>வருவாய் குறைவான நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டண தொகையினை செலுத்த வழி வகை செய்ய மாவட்டத்திற்கு தலா. ரூ. 10 இலட்சம் வீதம் (ரூ. 10 இலட்சம் x 28) | 2.80 | --- | --- |
| **1.3 உள்ளமைப்பு வசதிகள் மற்றும் பிற பணிகள்**<br>அ. ஊராட்சிகளிடையே உள் கட்டமைப்பு வசதிகளில் சமன்பாடு ஏற்படுத்தவும், நலிவுற்ற ஊராட்சிகள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஊராட்சிகள் இயற்கை சீற்றத்தால் அடிக்கடி உள் கட்டமைப்புகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள கடலோர மற்றும் மலைப்பகுதி ஊராட்சிகள் போதிய அடிப்படை வசதிகள், குடிநீர், தெருக்கள் மேம்பாடு, வடிகால் வசதி, சந்தைகள் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்த ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமன்பாட்டு நிதியுதவி. | 11.20 | 8.8633 | --- |
| ஆ. புதிய சோடியம் ஆவி விளக்குகள், குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மேம்பாடு செய்தல் | 1.00 | --- | --- |
| **1.4 வருவாய் குறைவான ஊராட்சி ஒன்றியம்**<br>நிர்வாக செலவை மேற்கொள்ள இயலாத நிதி இடைவெளியை ஈடு செய்ய நிதியுதவி, (கோவை மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம்) | --- | 0.20 | --- |

## 11. STATE FINANCE COMMISSION

| | | | |
|---|---|---|---|
| 1.5 பழுதடைந்துள்ள 2000 சத்துணவு மையங்களை சீரமைத்தல் | | --- | 2.00 --- |
| **ஊக்க நிதி**<br>2.1 ஊராட்சிகளில் வீட்டுவரி வசூல்களுக்கு ஈடாக இணை மான்யம் (1:2 - Rs. 20.07 கோடி x 2) | 40.14 | --- | --- |
| 2.2 ஒரு ஊராட்சியில் எத்தனை இடுகாடுகள் இருப்பினும், அத்தனை இடுகாட்டையும் எந்த சாதியினருக்கும் வேறுபாடின்றி பயன்படுத்திக் கொள்ளலாமென ஊராட்சிகள் தீர்மானம் நிறைவேற்றி அது குறைந்தது ஆறு மாதமாவது நடைமுறைப்படுத்தியிருப்பின் அந்த ஊராட்சிக்கு ரூ .1 இலட்சம் வீதம் சிறப்பு ஊக்க நிதியாக 250 ஊராட்சிகளுக்கு வழங்குதல் | 2.50 | --- | --- |
| 2.3 சிறப்பாக பணியாற்றும் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்குவிற்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும், சிறந்த மூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் சிறந்த மூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மூன்று மாவட்ட ஊராட்சிகள் என தேர்வு செய்து, அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ஊக்க நிதி வழங்குதல் | 0.55 | 1.09 | 0.18* |
| 2.4 மாநில அளவில் விழா ஏற்பாடு செய்தல், மற்றும் இதர செலவினங்கள் | 0.14* | --- | --- |
| மொத்தம் | 61.13 | 12.1533 | 0.18 |
| ஆக மொத்தம் | | 73.4633 | |

* ஊரக வளர்ச்சி இயக்ககத்தால் செயல்படுத்தப்படும்

3. மேலே கூறப்பட்டுள்ள இனம் 1.1 .மற்றும் இனம் 1.2ல் கண்டுள்ள தொகையினை ஊரக வளர்ச்சி இயக்குநர் பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக குறிப்பிட்ட கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் மற்றும் மின்கட்டணம் வரை செலுத்தவும், 1.3ல் (அ) மற்றும் (ஆ)–ல் கண்டுள்ள தொகையினை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் அடிப்படை வசதிகளை செய்ய மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெற்று நிதி ஒதுக்கீடு செய்யவும், இனம் 1.4 மற்றும் 1.5ல் உள்ள தொகையினை பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கவும், இனம் 2.1ல் உள்ள ஊக்க நிதியினை 1998–99 ம் ஆண்டு ஊராட்சிகளில் வீட்டுவரியாக வசூல் செய்யப்பட்டதற்கு இரண்டு மடங்கு ஈடாக (இணை மான்யம் 2 :வீட்டு வரி வசூல் 1) கிராம ஊராட்சிகளுக்கு வழங்கவும், இனம் 2.1ல் உள்ள தொகையை மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பெற்று வழங்கவும், இனம் 2.2ல் உள்ள கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தொகையை மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பெற்று வழங்கவும், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரங்கள் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. ஊரக வளர்ச்சித்துறையின் 01.06.99 நாளிட்ட அரசாணை எண். 97ல் சிறப்பாக பணியாற்றும் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த மூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் சிறந்த மூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மூன்று மாவட்ட ஊராட்சிகள் என தேர்வு செய்து அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ஊக்க நிதி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணைக்கிணங்க இனம் 2.3 மற்றும் 2.4ல் உள்ள ஊராட்சி / மாவட்ட ஊராட்சிகளின் தொகையை பெற்றுக் கொள்ள ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரங்கள் அளித்து அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி **2**ல் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியினை பெற்று அந்நிதியினை நான்கு காலாண்டு தவணைகளில் விடுவிக்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

**6.** ஆணையிடப்பட்ட இச்செலவினமாக ரூ. **73.4633** (எழுபத்தி மூன்று கோடியே நாற்பத்தாறு இலட்சத்து முப்பத்து மூவாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் –

**3604.00** உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்–

**200.** ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்–

**1.**. திட்டத்தில் சேராதது–

BB. மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு மொத்த நிதியொதுக்கம்–

**09.** உதவி மான்யங்கள்

(DPC 3604-00-200-BB-0909)

**7.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 2259/FS/P99 நாள் **24.06.99** இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்